# முன்னேச்சரம்





இலங்கையிலே சிவனுக்குரிய தொன்மைமிக்க ஆலயங்களுட் முன்னேச்சரமும் ஒன்றாகும். இது இலங்கையின் வடமேல் மாகாணத்தில் சிலாபம் என்னும் ஊரிற் சிறப்புமிக்க ஆலயமாகத் திகழ்கிறது. தற்காலத்தில் தெதுறுஓயா என அழைக்கப்படும் மாயவனாற்றங் கரைக்கு அண்மையில் இது அமைந்துள்ளது. வருடத்தில் இருமுறை மகோற்சவம் நடைபெறும் ஆலயம் என்ற பெருமை இதற்கு உண்டு. முன்னைநாதப் பெருமானுக்கும், வடிவாம்பிகை அம்பாளுக்கும் இவ்வுற்சவங்கள் நடைபெறும். இங்கு எழுந்தருளியிருக்கும் இறைவனின் பெயர் முன்னைநாதப்பெருமான். இறைவியின் பெயர் வடிவாம்பிகை அம்பாள் ஆகும்.

இவ்வாலயத்திலே மாசி மாத மக நட்சத்திரத்தைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு அன்னை வடிவாம்பிகையின் உற்சவம் பத்து நாட்கள் நடைபெறும். இது ஒரு சிவத்தலமாக இருப்பினும், சக்திக்கு இத்துணை முக்கியத்துவமளிப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் வசந்த நவராத்திரி விழாவும் பக்தோற்சவ விழாவும் இங்கு நடைபெறும் திருவிழாக்களுள் மிக முக்கியமானவை. ஆண்டுதோறும் ஆவணிப் பௌர்ணமி தினத்தைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு இருபத்தேழு நாட்கள் முன்னைநாதப்

பெருமானின் உற்சவம் இடம்பெறும். அடியவர்கள் இத்தினங்களில் இறைவனையும் இறைவியையும் வழிபாடு செய்து ஆனந்தப் பெரு வெள்ளத்திலே திளைப்பர்.

இத்தலந் தொடர்பாகப் புராணக் கதை ஒன்று கூறப்படுகிறது. மகாவிஷ்ணுவின் அவதாரமாக இராமபிரான் இவ்வுலகிலே தோன்றினார். தன்னை எதிர்த்த சிவபக்தனான இராவணனை அழித்தார். இதனால் தனக்கேற்பட்ட தோசம் நீங்குவதற்காக இத்தலத்திலே சிவலிங்கம் அமைத்துப் பூசை செய்து வழிபட்டார் என இதிகாசங்கள் கூறுகின்றன.

புராதன காலத்தில் ஆறாம் பராக்கிரமபாகு, ஒன்பதாம் பராக்கிரமபாகு, குளக்கோட்டன் போன்ற பண்டைய மன்னர்கள் மானியங்கள் பல வழங்கி இவ்வாலயத்தைப் பராமரித்துப் போற்றினர். போர்த்துக்கேயர் ஆட்சியின் போது இந்த ஆலயம் நிலைகுலைந்தது. எனினும் அடியவருள்ளத்திற் கோயில் கொண்ட எம்பெருமானை அவர்களால் அகற்ற முடியவில்லை. எனவே கீர்த்தி ஸ்ரீ இராசசிங்க மன்னனால் இவ்வாலயம் மீண்டும் புனரமைக்கப்பட்டது. 1753 இலே கும்பாபிடேகமும் செய்து வைக்கப்பட்டது.

இன்று இவ்வாலயத்தில் வீற்றிருக்கும் அன்னை வடிவாம்பிகை அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றாகி அருட்சக்தி மிக்கவளாக விளங்குகிறார். வடிவாம்பிகை சமேத முன்னேஸ்வரப் பெருமானின் அருளாட்சியில் நாமுந் துன்பம் நீங்கி இன்பமாய் வாழ்வோம்.

"முன்னேச்சரம் செல்வோம்:
மன மாசைப் போக்குவோம்".

## பயிற்சி

**சுருக்கமான விடை எழுதுங்கள்.**

1) முன்னேச்சர ஆலயம் எங்கே அமைந்துள்ளது?
2) முன்னேச்சரத்தின் தனிச்சிறப்பு யாது?
3) வடிவாம்பிகை அம்மாளுக்கு நடைபெறும் தீர்த்தோற்சவம் எப்போது நடைபெறும்?
4) முன்னைநாதப்பெருமானுக்காக நடைபெறும் தீர்த்தோற்சவம் எப்போது நடைபெறும்?
5) முன்னேச்சரத்தில் சிவலிங்கம் அமைத்து வழிபட்டவர் யார்?
6) முன்னேச்சர ஆலயத்திற்கு மானியங்கள் வழங்கித் தொண்டு செய்த மன்னர்கள் யாவர்?
7) சக்திபீடங்கள் எத்தனை?

## செயற்பாடு

- அதிபர், ஆசிரியர், பெற்றோர் அனுசரணையுடன் முன்னேச்சர ஆலயத்தை வழிபடுவதற்கும், தலச் சிறப்பைப் பார்வையிடுவதற்கும் ஒரு வெளிக்களப் பிரயாணத்தை மேற்கொள்ளுங்கள்.